சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திருமதி. ஆர். சத்யதாரா., எம்.ஏ., எம்.எல்.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 273/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 1 (LW-1) | நாள் | 15.06.2026 |
| பெயர் | வைதேகி | வயது | 28 |
| தந்தை பெயர் | முருகேசன் | ஊர் | திருமுல்லைவாசல் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)
சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை -1 என்பவரால் உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் திருமுல்லை வாசல், தாழந்தொண்டி, தந்தை பெரியார் நகரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் ஆவேன். சுமார் எட்டாண்டுகளுக்கு முன்பு திருமுல்லை வாசலில் உள்ள உதயம் ஜவுளி ஸ்டோர் என்ற கடையில் வேலை பார்த்து வந்தேன். அப்போது என்னுடன் வேலை பார்த்து வந்த சந்தியா என்பவர் மூலமாக ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி நான் வேலை பார்க்கும் கடைக்கு அடிக்கடி வருவார். நாங்கள் இருவரும் காதலித்தோம். திருமணம் செய்துகொள்வதாக கூறினார். திருமணம் செய்து கொள்ள காலதாமதமானதால் என் அக்கா ஆனந்தவள்ளி என்பவரிடம் சொன்னேன். தாழந்தொண்டியில் உள்ள சவுக்கு தோப்பில் நானும் ஆஜர் எதிரியும் நிறைய தடவை ஒன்றாக இருந்தோம். எங்களுக்கு தாம்பத்தியம் ஏற்பட்டது. ஆனால் அவர் என்னை திருமணம் செய்து கொள்ளாமல் திருமணம் செய்து கொள்ள நான் கேட்டபோது கால தாமதமாக என்னை திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி கொடுத்தார். அதன்பிறகும் அவர் என்னை திருமணம் செய்து கொள்ளாததால் என் அக்கா ஆனந்தவள்ளியிடம் தகவல் சொன்னேன்.

அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார். எங்களுக்குள் ஏற்பட்ட பழக்கத்தை நான் வேறு எந்த நபரிடமும் சொல்லவில்லை. எதிரி இந்து – வன்னியர் வகுப்பை சேர்ந்தவர். நானும் என் அக்காவும் சீர்காழி மகளிர் காவல் நிலையத்திற்கு போய் புகார் கொடுத்தோம். நான் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படுவது அதசா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள விவரங்களை நான் என் கைப்பட எழுதிக்கொடுத்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலிஸ் என்னை விசாரித்தார்கள். நான் எதிரி என்னை காதலித்து திருமணம் செய்து கொள்வதாக சொல்லி என்னுடன் ஒன்றாக இருந்த விவரத்தை மட்டும் சொன்னேன்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழுங்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் போலிஸ் விசாரணையில் எதிரியும் நானும் காதலித்து வந்த சமயத்தில் கடந்த 09.04.2020 தேதியில் தாழந்தொண்டியில் உள்ள தந்தை பெரியார் நகரில் உள்ள அம்பிகாவிற்கு சொந்தமாக சவுக்கு தோப்பில் எதிரி என்னிடம் வலுக்கட்டாயமாக என்னுடன் ஆசை வார்த்தை கூறி உடலுறவு வைத்துக்கொண்டு என்னை திருமணம் செய்துகொள்ள நான் கேட்டபோது நான் தாழத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்று என்னை குலுங்குற தேவுடியா பற செருக்கி என்று காமகுரோதமான வார்த்தைகளால் என்னை திட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் அப்போது அவ்வழியாக வந்த மேட்டு தெருவை சேர்ந்த தமிழ்செல்வம், பிரவின், கரண் அவர்களிடமும் நான் நடந்ததை சொன்னதாகவும் அவர்கள் மோகன்ராஜை பிடித்து விசாரித்து அறிவழகன்

பாஸ்கருக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்தவுடன் அவர்களிடம் ஒப்படைத்து நாளை வாங்கள் என்று ரமேஷ், தமிழ்செல்வம் சொன்னதாவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பிறகு நான் என் அக்காவுடன் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டேன் என்றும் ஊர்காரர்கள் பாஸ்கர் மற்றும்அறிவழனிடமும் மோகன்ராஜை மறுநாள் அழைத்து வர சொன்னபோது அவன் ஓடிவிட்டதாக தகவல் சொன்னதாகவும் நான் போலிசார் விசாரணையில் சொ்லலியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எனக்கு வேறு ஒருவருடன் திருமணமாகிவிட்டதால் எதிரியை காப்பாற்ற நடந்த உண்மைகளை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி என்னுடைய விருப்பத்தின்பேரில் தான் என்னுடன் உடலுறவு வைத்துக்கொண்டார் என்றால் சரிதான். எதிரி என்னுடைய சாதியை சொல்லி ஆபாசமான வார்த்தைகளால் என்னை திட்டவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றவில்லை என்றால் திருமணம் செய்துகொள்வதாகத்தான் சொன்னார். என் குடும்பத்தாரின் வற்புறுத்தலின்பேரில் நான் வேறு நபரை திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான்.

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– திருமதி. ஆர். சத்யதாரா., எம்.ஏ., எம்.எல்.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 273/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2 (LW–8) | நாள் | 15.06.2026 |
| பெயர் | தேவா | வயது | 27 |
| தந்தை பெயர் | முருகேசன் | கிராமம் | திருமுல்லை வாசல் |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை –1 என்பவரால் உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் திருமுல்லை வாசல், தாழந்தொண்டி, தந்தை பெரியார் நகரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் பக்கத்து ஊரை சேர்ந்தவர். அசா 1 என் சகோதரி. அவர் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறார். அவர் உதயம் ஜவுளிக்கடையில் நான்கு வருடமாக வேலை பார்த்து வந்தார். கொரணா தொற்று காலத்தில் ஊரடங்கு நேரத்தில் இரண்டு மாதமாக ஊரில் இருந்தேன். என் அக்காவும் ஆஜர் எதிரியும் காதலித்து வந்த விவரம் எனக்கு தெரியும் அவர்களுக்கு என்ன நடந்தது என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என் அக்கா எதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிஸ் விசாரைணையில் ஆஜர் எதிரி என் அக்காவை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி அம்பிகாவிற்கு

சொந்தமான சவுக்கு தோப்பில் உடலுறவு வைத்துக்கொண்டதாக என் நண்பர் மூலம் கேள்விப்பட்டதாக போலிஸ் விசாரணையில் சொ்லலியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் அக்காவை தாழ்ப்பட்ட ்சாதியை சேர்ந்தவர் என்று ஆபாசமான வார்த்தைகாளல் சாதி பெயரை சொல்லியும் திருமணம் செய்து கொள்ள முடியாது என்றும் எதிரி மறுத்த விசயத்தை என் அக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது என் அக்காவுக்கு வேறு ஒரு நபருடன் திருமணமாகிவிட்டதால் ஆஜர் எதிரியை காப்பாற்ற பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.